7th December 1959]

போன்றவைகளில் பயிற்சி கொடுத்தால் அவர்கள் பழைய தொழிலைத் தொடங்காமல் மறுவழி, நல்லவழி காணப்படும் வகையில் அவர்களுக்கு இம்மாதிரி பயிற்சி கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பார்ஸ்டல் ஸ்கூலில் இருக்கிறவர்களுக்கு எத்தகைய தகுதியான பயிற்சி கொடுக்கலாம் என்பதுபற்றி அப்போதைக்கப்போது கவனம் செலுத்தி அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI A. V. P. ASAITHAMBI : சிறைகளிலுள்ள கைதிகளைத் திருத்துவதற்கு நல்லுரைகள் அவ்வப்போது செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நல்லுரைகள் என்பது வெறும் மதப் பிரசாரமா அல்லது பொதுவான விஷயங்கள் அவர்களுக்கு அறிவுப்படுத்தப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மதப் பிரசாரம், நல்லவர்களாக இருப்பதற்கு பெரும்பாலும் காரணமாகிறது என்பது என் அபிப்பிராயம். ஆனால் மதப் பிரசாரம் செய்வது என்பது இல்லை. நல்லுரைகள் வழங்குவதுதான் நோக்கம்.

MR. SPEAKER : அடுத்த இரண்டு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

Homoeopathic Colleges

* 5 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Madras Presidency Homoeopathic Association has put forward any proposal before the Government for starting of a Homoeopathic College and Hospital; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Association has requested the Government to start a Homoeopathic College and Hospital or in the alternative to render substantial financial assistance to the College to be started by the Association.

* 6 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether steps have been taken for starting Homoeopathic Colleges; and

(*b*) whether there is any proposal to recognize all the Homoeopathic practitioners who have experience of three years or more?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No Sir.

(*b*) No.

[7th December 1959

SRI N. K. PALANISAMI : எவ்வளவு தொகை கேட்டிருந்தார்கள்? எவ்வளவு தொகை இந்த காலேஜுக்கும், ஆஸ்பத்திரிக்கும் கேட்டிருந்தார்கள்? சர்க்கார் ஏன் அதைக் கட்டுவதற்கு தயங்க வேண்டும்?

THE HON. SRI M. A. MANICKAVELU : தொகை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆரம்பிக்கிறதா அல்லது அரசாங்கம் ஆரம்பிக்கிறதா என்று முடிவாகவில்லை. தொகை விஷயம் அப்புறந்தான்.

SRI M. S. SELVARAJAN : ஹோமியோபதி டாக்டர்களை ரெஜிஸ்டர் செய்வதற்கு 'தேவ் கமிட்டி" ரிப்போர்ட் ஆதாரமாகவும் அடிப்படையாகவும் கொள்ளப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஹோமியோபதி முறைப்பிரகாரம் வைத்தியம் செய்கிறவர்களில் யார் யாரை ரெஜிஸ்டர் செய்யலாம், மூன்று வருடம் பயிற்சி செய்தவர்களையா அல்லது இரண்டு வருஷம் பயிற்சி செய்தவர்களையா என்பது ஒன்றும் முடிவாகவில்லை. டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸ்க்கு எழுதியிருக்கிறோம். இந்த லிஸ்டத்தை நாம் அங்கீகரித்தோம். அதை இம்ப்ளிமென்ட் செய்ய ரூல்ஸ், அது இதெல்லாம் ஏற்படவில்லை. அவர்கள் கேட்டிருக்கிறார்கள், ஆனால் பிற்பாடுதான் செய்ய வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : நமது மதிப்பிற்குரிய உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், ஹோமியோபதி மருந்து குழந்தைகளுக்கு உடனடியாக நிவாரணம் கொடுப்பதாகவும் அதேபோன்று ஏழைகளுக்கும் அது குறைந்த விலைக்கு வாங்குவதற்கான நிலையில் உள்ளதாகவும் இருக்கின்றன என்று சொன்னது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? ஆகவே அதை முன்னிட்டாவது உடனடியாக இதைக் கவனித்து டிப்ளமா வாங்கிய எல்லோரையும் அங்கீகாரம் செய்ய சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் உப ஜனாதிபதி அவர்கள் சொல்வதற்கு முன்பே அரசாங்கம் இதை அங்கீகரித்து விட்டது.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் கேள்வி கேட்கும்போது உப ஜனாதிபதி எங்கு சொன்னார் எப்பொழுது சொன்னார் என்று சொன்னால் நன்றாயிருக்கும்.

SRI K. VINAYAKAM : I am not going to put such an irrelevant question.

SRI V. K. KOTHANDARAMAN : On a point of order. அவர் சொன்னதை நான் இங்கே எடுத்துக் காட்டும்போது பொறுப்புள்ள ஒரு அங்கத்தினர் பொறுப்பற்ற தன்மையில் இப்படி சொல்கிறார் என்று சொன்னால் அது நேர்மையா என்று நான் சபாநாயகர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பிய பின்னால் சொல்லக்கூடாது.

7th December 1959]

SRI K. VINAYAKAM : Have the Government any confidence in the efficacy of this system of medicine or is it only lip sympathy that is shown by the Government?

MR. SPEAKER : Insinuations must not be there in questions. The hon. Member is making an insinuation. Anyway, if the Hon. Minister is going to answer, he can do so.

THE HON. SRI M. A. MANICKAVELU : The Government have recognized this system because it is also based on certain principles. It is being practiced in many other States also. The Government have not seen any illeffect on people taking up the system of treatment.

SRI N. K. PALANISAMI : *சர்க்கார் இந்த முறையை ஒத்துக் கொண்ட பிறகு ஏன் ஆஸ்பத்திரியையும், காலேஜையும் சாககார் கட்ட ஏற்பாடு செய்யக் கூடாது?*

THE HON. SRI M. A. MANICKAVELU : *நான் முன்பே சொன்னேன், இதை அங்கீகரித்தோம். அதை அமுலில் கொண்டு வருவதுபற்றி வேண்டிய விதிகளுக்கு எல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டும். அதையெல்லாம் ஏற்பாடு செய்த பிற்பாடு அரசாங்கம் ஏதாவது செய்யமுடியுமா அல்லது வேறு யாராவது முன்வந்தால் அவர்களுக்கு உதவி செய்யலாமா என்பதையெல்லாம் அப்புறந் தான் ஆலோசிக்கவேண்டும்.*

Proceeds under the Madras Motor Vehicles Taxation Act

* 7 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the amount demanded by the Corporation of Madras as compensation for maintenance of roads, as share from the proceeds under the Madras Motor Vehicles Taxation Act?

THE HON. SRI V. RAMAIAH : In 1956 and 1957 the Corporation of Madras requested that it may be paid as compensation a share of not less than 90 per cent of the amount of tax collected on motor vehicles within the City of Madras under the Madras Motor Vehicles Taxation Act. This request was not complied with.

SRI K. VINAYAKAM : May I know the amount collected under this head by the Government of Madras in the City of Madras and the proportion of tax that is now being given back to the Corporation to enable it to maintain these roads?

THE HON. SRI V. RAMAIAH : We have collected Rs. 60,99,221 in 1956–57, Rs. 68,53,156 in 1957–58 and Rs. 72,30,180 in 1958–59. Out of these, the Corporation is being paid annually Rs. 3,57,000 as toll compensation under the Motor Vehicles Act. The Corporation is also paid a sum of Rs. 7,843 as licence fee compensation.